*71*

# அரசரிடமிருந்து ஒரு அழைப்பு!

## மத்தேயு 22:1-14, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*கதவு தட்டப்படுதலைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் கதவைத் திறக்கும்போது, தனிச்சிறப்பான வகையான தோற்றம் கொண்ட ஒரு மனிதர் அங்கு நின்று கொண்டிருக்கின்றார். "நான் புதுடில்லியிலிருந்து இதைக் கொடுப்பதற்காக உங்களிடத்திற்கு வந்துள்ளேன்" என்று அவர் கூறுகின்றார். அவர் உங்களிடத்தில் தபால் உறையொன்றைக் கையளிக் கின்றார். அதற்குள், நாட்டின் விஷயம் பற்றிப் பேசுவதற்காக இந்திய ஜனாதிபதியிடமிருந்து ஒரு அழைப்பு உள்ளது. அந்த மனிதர், "வெளியில் கார் நின்றுகொண்டிருக்கிறது, உங்களால் முடிந்த அளவுக்கு விரைவாகப் புறப்படுங்கள். உங்களை நான் விமான நிலையத்திற்குக் கொண்டு போவேன். ஜனாதிபதியின் விமானம் உங்களுக்காகக் காத்திருக்கிறது" என்று கூறுகின்றார். அது உண்மையிலேயே பரபரப்பு மிகுந்ததாக இருக்கும். இருப்பினும், இன்றைய பிரசங்கம் அதைவிட அதிகம் மெய்சிலிர்ப்பு மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அழைப்பு பற்றியதாக உள்ளது: இது அண்டத்தை ஆளுகின்றவரான ஒரு ராஜாவிடமிருந்து வந்த அழைப்பாக உள்ளது!*

மத்தேயு 22:1-14 நமது வேத பாடப்பகுதியாக உள்ளது. இயேசுவின் சொந்த ஊழியத்தின் கடைசி வாரமே இதன் காட்சியமைவாக உள்ளது. இந்த நிகழ்ச்சிகள் "கேள்விகளின் மாபெரும் நாளான" செவ்வாய்க்கிழமை யன்று நடைபெற்றன. கிறிஸ்து தேவாலயத்தில் போதித்துக்கொண்டிருக்கை யில், சனகெரீன் சங்கத்திலிருந்து வந்த பிரதிநிதிகளால் அவர் எதிர்கொள்ளப் பட்டார். அவரிடத்தில் அவர்கள், "நீர் எந்த அதிகாரத்தில் இவைகளைச் செய்கிறீர்?" என்று கேட்டனர் (மத். 21:23). கர்த்தர் தமது பதிலின் ஒரு பகுதியாக, தமது விரோதிகளின் பாவம் நிறைந்த தன்மையை வெளிப் படுத்திய மூன்று உவமைகளை எடுத்துரைத்தார். இரண்டு மகன்கள் மற்றும் பொல்லாத குத்தகைக்காரர்கள் பற்றியவை முதல் இரண்டு உவமைகளாக இருந்தன. இராஜாவின் மகனுடைய திருமண விருந்து என்பது மூன்றாவது உவமையாக இருந்தது. இது, இயேசு பல வாரங்களுக்கு முன்பு பேசியிருந்த ஒரு உவமையைப் போன்றதாகவே இருந்தது (லூக். 14), ஆனால் ஒரு சில விவரங்கள் மாறுபட்டவையாக உள்ளன. இது ஒரு இரட்டை உவமை என்ற வகையில் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது, இதில் இரு உவமைகள் ஒன்றாக உள்ளன.[1] இதில் இரண்டாவது உவமை, திருமண உடை பற்றிய

உவமை என்று அழைக்கப்படக்கூடும்.

நான் இந்தப் பிரசங்கத்திற்கு, "அரசரிடமிருந்து ஒரு அழைப்பு!" என்று தலைப்பிட்டுள்ளேன். இதில் நாம், இந்த அழைப்பைப் பற்றிய மூன்று சத்தியங்களை நமது வேத பாடப்பகுதியில் இருந்து தரவழைப்போம்.

## இது அகம்மகிழ வேண்டிய ஒரு அழைப்பாக உள்ளது (வ. 1-3)

**உவமை**

இவ்வசனப் பகுதியானது பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்கு கிறது: "இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னது என்னவென்றால்: 'பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த[2] ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது' " (வ. 1, 2). இந்த உவமையில் உள்ள ராஜா தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். இந்தக் கதை தொடங்குகையில் ராஜா, "அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை[3] அனுப் பினான்" (வ. 3அ).

**கருத்து**

முதலில் நான், இந்த அழைப்பின் இயல்பைக் குறிப்பிட விரும்பு கின்றேன்: இது ஒரு திருமண விருந்து என்ற வைபவ வேளைக்கான அழைப் பாக இருந்தது. பழைய ஏற்பாட்டில், வரவிருந்த மேசியாத்துவ காலத்தை - அதாவது கிறிஸ்தவத்தை - பற்றி முன்னுரைப்பதற்கு திருமணம் மற்றும் விருந்து என்ற உருவகங்கள் பயன்படுத்தப்பட்டன.[4] புதிய ஏற்பாட்டில், இந்த உருவகங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன.[5] சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக உள்ளது (எபே. 5:23-27, 31, 32; 2 கொரி. 11:2ஐக் காணவும்).[6] "திருமண விருந்து" என்பது ஒரு கருத்தமைவில் ஏற்கனவே தொடங்கியுள்ளது,[7] மற்றும் இது நித்தியத்திற்கும் தொடரும். வெளிப்படுத்தின விசேஷத்தில், தேவனுடைய மக்களின் வெற்றியானது கொண்டாடப்படுகிறது: "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்" (19:9அ).

இந்த உருவகத்திலிருந்து நாம், கிறிஸ்தவ வாழ்வின் ஆசீர்வதிக்கப்பட்ட தன்மையையும் மகிழ்ச்சியையும் சுதந்தரித்துக் கொள்ளுதல் பற்றிய மனப்பதிவை உடையவர்களாய் இருக்க வேண்டும். ஆம், கிறிஸ்தவராக இருப்பதில் தெளிவான அம்சங்கள் உள்ளன. உவமைகள், திராட்சத் தோட்டத்தில் அல்லது ஒரு வயலில் வேலை செய்வது என்பதுட னும் ராஜ்யத்தை ஒப்பிட்டுள்ளன, ஆனால் கிறிஸ்தவம் என்பது அவ்விஷயமாக மட்டும் இருப்பதில்லை.[8] அதிலே சந்தோஷம் அடங்கி உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, கிறிஸ்தவர்கள் எப்போதுமே இதை உணர்ந்தறிவ தில்லை. நான்காம் நூற்றாண்டின் காலவேளையில் எழுதப்பட்ட ஒரு கடிதமானது கிறிஸ்துவுக்கு உடல் அமைப்பு இருப்பது போன்று, அதை

விவரிக்க முயற்சி மேற்கொண்டது. இந்தக் கடிதத்தில் மற்ற விஷயங் களுடன், கர்த்தரை பற்றி, அவர் "ஒருக்காலும் சிரிப்பவராகக் காணப்பட வில்லை, ஆனால் அடிக்கடி அழுபவராகக் காணப்படுகின்றார்" என்றுள்ளது.[9] அந்த விவரிப்பு உண்மையில் ஆதாரம் எதையும் கொண்டிருப் பதில்லை.[10] இருந்தபோதிலும், "இது இயேசுவைப் பற்றி எழுதப்பட்ட முதல் விவரிப்பாக இருப்பதால், தொடர்ந்து வந்த காலத்தில் இது, ஓவியம் மற்றும் சிற்பக்கலையில் மறையாத செயல்விளைவைக் கொண்டிருந்தது, இன்றைய நாட்களிலும்கூட, இயேசு பெரும்பாலும் ஒருபோதும் சிரிக்காத மனிதராகவே சித்தரிக்கப்படுகின்றார்."[11]

ஆண்டுகளினூடாக, இயேசுவைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்பவர் கள் கிறிஸ்தவத்தில் ஒரு சிறிதளவே மகிழ்ச்சி காணப்பட வேண்டும் என்று அடிக்கடி செயல்விளக்கப்படுத்தியுள்ளனர். பியூரித்தான்கள் என்ற நாமகரணக்கூட்டத்தார், சிறு பிள்ளைகள் விளையாடும் பொம்மைகளை "மாம்சத்தின் கிரியை" என்று கூறிக் கண்டனம் செய்துள்ளார்கள். ஜான் வெஸ்லி என்பவர் சிறுபிள்ளைகளுக்கு ஒரு விடுதியுடன் கூடிய பள்ளியொன்றை நிலைநாட்டியபோது அவர்கள், கோடைகாலமோ குளிர்காலமோ, எப்படியிருப்பினும், காலை 4.00 மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரது பள்ளியில் ஏதாவது ஒரு வகையிலான விளையாட்டிற்கு அனுமதிப்பதற்கென்று இடைவேளை மணிப்பொழுதுகளோ அல்லது விடுமுறை நாட்களோ விடப்பட்டிருந்ததில்லை.

முழுமையான இந்த இருள் தன்மைக்கு நேர்மாறாக, "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" என்று பவுல் எழுதினார் (பிலி. 4:4). திருமண விருந்திற்கான இந்த அழைப்பிதழ் மகிழ்ச்சியடைய வேண்டிய ஒன்றாக இருந்ததென்று மீண்டுமாக நான் கூறுகின்றேன்.

இது இப்படியிருந்தபடியால், நாம் இரண்டு சத்தியங்களை ஆழ்ந்து சிந்திப்போம். (1) அரசரின் அழைப்பை நாம் ஏற்க மறுத்தால், நாம் மகிழ்ச்சியை நிராகரிக்கின்றோம். இந்த உவமையில் அழைப்பிற்குப் பதில்செயல் செய்யாதவர்கள்மீது இரட்டைத் துன்பம் விழுந்தது: அவர்கள் தள்ளிவிடப்பட்டது மட்டுமின்றி, அவர்கள் விருந்தின் மகிழ்ச்சியைத் தவற விட்டும் இருந்தனர். (2) நாம் அழைப்பை ஏற்றால், நாம் மகிழ்ச்சியுடன் இருக்க முயற்சி செய்ய வேண்டும். தேவன் தமது திருமண விருந்தில் கவலையான முகத்துடன் உள்ள விருந்தினர்களை விரும்புவதில்லை.

## இது ஒரு பதில்செயலை வேண்டுகிற அழைப்பாக உள்ளது (வ. 3-10, 14)

**உவமை**

நாம் கதைக்குத் திரும்புவோம். ராஜா, "அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பி

*னான்'' (வ. 3அ). வேத வசனப் பகுதியில் ஒரு இரட்டை அழைப்பு கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது: குறிப்பிட்ட தனிநபர்கள் விருந்துக்கு வரும்படி ஏற்கனவே அழைப்பிதழைப் பெற்றிருந்தனர்; பின்பு, விருந்து தயாரானபோது, அழைக்கப்பட்டிருந்த இந்த விருந்தினர்கள் விருந்துக்கு வரும் வேளையாயிற்று என்று கூறி, அவர்களை அழைப்பதற்காக ஊழியக்காரர்கள் அனுப்பப்பட்டனர்.*[12]

*அழைப்பிதழைப் பெற்றுக்கொண்டவர்கள் இஸ்ரவேல் ஜனங்களைப் பிரநிதித்துவப்படுத்தினர்.*[13] *அவர்கள் மேசியாத்துவ விருந்தைப் பற்றிப் போதித்திருந்த தீர்க்கதரிசிகளால் ''அழைக்கப்பட்டிருந்தனர்.'' இந்த உவமை, இரண்டாவது அழைப்பைப் பற்றிப் பேசுகிறது என்ற உண்மை யானது, யூதர்கள் இந்த முதல் அழைப்பை ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது; அதாவது, வரவிருந்த மேசியாத்துவ ராஜ்யம் பற்றிய கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர்.*

*விருந்து தயாராயிற்று என்று அழைக்கப்பட்டவர்களுக்குக் கூறப்பட்ட போது, "அவர்களோ வரமனதில்லாதிருந்தார்கள்" (வ. 3ஆ). இவ்விதமாக, அவர்கள் தங்கள் கடினமான மற்றும் கலகம் விளைவிக்கின்ற ஆவிகளை வெளிப்படுத்தினர். இருப்பினும் ராஜா அவர்களுக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுக்க மனதாயிருந்தார். ஒருவேளை அவர், ''முதல் செய்தியாளர்கள் கூறியதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. சந்தேகத்தின் பலனை அவர்களுக்குக் கொடுப்பேன்'' என்று நினைத்திருக்கலாம். ஆகவே ...*

> *... அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து, "நீங்கள் போய், 'இதோ என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள்' என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று" அனுப்பினான் (வ. 4).*

*லூக்கா 14ன் உவமையில், இந்த வேளையில், அழைக்கப்பட்ட விருந்தினர்கள் போக்குச் சொல்லத் தொடங்கினார்கள். இந்த உவமையில், அழைக்கப்பட்டவர்கள் வேண்டுகோள்களைப் புறக்கணித்தனர்: "அழைக் கப்பட்டவர்களோ, அதை அசட்டை பண்ணி'' (வ. 5அ). மூலமொழி வசனம், அவர்களின் அக்கறைக் குறைவை வலியுறுத்துகிறது. எபிரெயர் 2:4ல் இதே கிரேக்க வார்த்தையானது "கவலையற்று இருத்தல்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அழைக்கப்பட்டவர்கள் வாய்ப்பின் மதிப்பை, மதிக்கத் தவறினார்கள். KJV வேதாகமம், ''அவர்கள் அதை இலேசாக எடுத்துக் கொண்டனர்" என்று கூறுகிறது.*

*ராஜா ஒரு இரட்டை அவமானத்தைப் பெற்றார். சிலர், மற்ற விஷயங்களில் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டதினால் அவரை அவமானப் படுத்தினர்: "ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள்" (வ. 5ஆ). இவைகள் துன்மார்க்கமான செயல்களா யிருந்ததில்லை; இவைகள் ராஜாவிடத்திலிருந்து வந்த அழைப்பைப் போன்று அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருக்கவில்லை.*

*வில்லியம் பார்க்ளே என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

> *நித்தியம் பற்றிய விஷயங்களை மறந்துபோகுமளவுக்கு காலம் பற்றிய விஷயங்களில் வேலைமும்முரமாயிருத்தல், காணப்படாதவைகளை மறந்துபோகும் அளவுக்கு காணப்படுகின்றவற்றில் மிகவும் இலயித்துப் போகுதல், கிறிஸ்துவின் குரலில் மென்மையான அழைப்பைக் கேட்க முடியாத அளவுக்கு உலகத்தின் உரிமைகோருதல்களை மிகவும் வலியுறுத்திக் கேட்குதல் என்பவை மனிதனுக்கு மிகவும் சுலபமாகவே உள்ளன. மிகச் சிறந்த விஷயங்களை, அதற்கு அடுத்தபடியாகச் சிறந்துள்ள விஷயங்கள் அடிக்கடி மூடிப்போடுதல், தம்மில் நல்லவையாக உள்ள விஷயங்கள் மிக மேன்மையானவற்றை மூடிப்போடுதல் என்பது வாழ்வின் துன்பநிலையாக உள்ளது.[14]*

*மற்றவர்கள், வன்முறையான புறக்கணித்தலினால் ஆட்சியாளரை அவமானப்படுத்தினார்கள்: "மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள்" (வ. 6). இது தீர்க்கதரிசிகளை யூதர்கள் நடத்தின வகையைக் குறிப்பிடுவதாகவும், ஒருவேளை அவர்கள் பிற்பாடு அப்போஸ்தலர்களை நடத்தவிருந்த வகையை முன்னுரைப்பதாகவும் இருக்கலாம். வேண்டுகோள்களைச் சிலர் புறக்கணித்தனர் மற்றும் சிலர் அதை எதிர்த்து நின்றனர் - ஆனால் முடிவு விளைவானது இரண்டு விஷயங்களிலும் ஒன்றுபோலவே இருந்தது.*

*உலகில் நான் வாழும் பகுதியில், இந்த இரண்டாவது வகையான தனிநபரை நாங்கள் எப்போதாவதுதான் எதிர்கொள்ளுகின்றோம், ஆனால் முதல் வகையான தனிநபர் அதிகம் சாதாரணமாகக் காணப்படுகின்றார். ஏராளமான மக்கள், ராஜாவின் அழைப்பின்மீது ஆர்வம் கொள்ள முடியாதபடிக்கு பிற விஷயங்களில் அதிகம் ஈடுபாட்டுடன் இருக்கின்றனர்.*

*ராஜாவின் பிரதிநிதிகளுக்குச் செய்யப்பட்டது, உண்மையில், ராஜாவுக்கே செய்யப்பட்டதாக இருந்தது.[15] இவ்விதமாக, நடந்தது என்ன என்பதை ராஜா அறிந்த பின்பு, அவர் "கோபமடைந்தார்" (வ. 7அ). தேவன் கருணையுள்ளவராக இருக்க முடியும், ஆனால் அவர் கோபம் கொள்ளவும் முடியும். தேவன் கோபம் கொண்டிருக்கும்போது, பின்னாலேயே நில்லுங்கள்!*

*ராஜா, "தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்" (வ. 7ஆ). சந்தர்ப்பப் பொருளில் இது, கி.பி. 70ல் எருசலேமானது ரோமப்படைகளால் அழிக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.*

*இருந்தபோதிலும், விருந்து தயாராக இருந்தது. ராஜா தமது ஊழியக்காரரிடத்தில், "கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள்" என்று கூறினார் (வ. 8). "அபாத்திரர்" என்பது தகுதியுடைமையில் உள்ள பொதுவான குறைபாட்டைக் குறிப்பதில்லை, ஆனால் அவர்கள் அழைப்பைப் புறக்கணித்தபடியால் தாங்கள் அபாத்திரரானதை அவர்களே காண்பித்தனர் என்ற உண்மையை உணர்த்துகிறது (அப். 13:44-46).* NIV *வேதாகமத்தில்*

அவர்கள் "வருவதற்கு தகுதியற்றவர்களாக" இருந்தனர் என்றுள்ளது.

''ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்துக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்'' என்று ஊழியக்காரர்களுக்கு ஆணையிடப்பட்டது (வ. 9): "வழிச்சந்திகள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொற்றொடர், மக்கள் சாதாரணமாகக் கூடும் இடத்தை குறிப்பிட்டது.[16] NIVயில், "வழிச்சந்திகள்" என்றுள்ளது. உங்கள் சமூகத்தில், இரவும் பகலும் ஏறக்குறைய எந்த வேளையிலும் மக்கள் ஒன்றுகூடியிருப்பதை, உங்களால் காணக்கூடிய இடம் ஒன்று உள்ளதா? ''வழிச்சந்திகள்'' என்ற சொற்றொடரில் அவ்விதமான கருத்துத்தான் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. ராஜா, "காணப்படுகிற யாவரையும் கலியாணத்துக்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்றார். இது பிரதான கட்டளைபோல் ஒலிக்கிறது அல்லவா? "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15).

ராஜா கட்டளையிட்டபடியே செய்தியாளர்கள் செய்தனர்: அவர்கள், ''புறப்பட்டு வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்'' (வ. 10அ).[17] ''நல்லார் பொல்லார்'' என்பது தேவனுடைய ராஜ்யத்தில் பொல்லாங்கு இடம் பெற்றுள்ளது என்று அர்த்தப்படுவதில்லை, ஆனால் தேவன் எல்லா மக்கள் மீதும் ஆர்வமாய் இருக்கின்றார் என்றே அர்த்தப்படுகிறது - அவர்கள் நல்லவர்களோ அல்லது பொல்லாதவர்களோ எப்படியிருப்பினும் - ஒவ்வொருவரையும் அழைக்கின்றார். சுவிசேஷமானது எல்லாருக்குமானது. முந்திய அத்தியாயத்தில் கர்த்தர், தமது நாளில் ''பொல்லாத மக்கள்'' என்பவர்கள் "மதம் சார்ந்த" மக்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாய் செவி கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காண்பித்திருந்தார் (மத். 21:28-32).

கிருபையினாலே இரட்சிப்பு என்ற உபதேசமானது இங்கு மறைமுக மாய் உணர்த்தப்படுகிறது; "தெருக்களில்" இருந்தவர்கள் அழைப்பிற்குப் பாத்திரமான எதையும் செய்திருக்கவில்லை. அவர்கள் விருந்திற்கு வருவதற் குரிய உரிமையை ஈட்டியிருந்ததில்லை. இது முற்றிலும் கிருபையினாலான தாக இருந்தது (எபே. 2:8, 9ஐக் காணவும்).

ஊழியக்காரர்கள் சுற்றிலும் இருந்த பகுதிகளில் தங்கள் தேடுதலை முடித்த பின்பு, "கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது" (வ. 10ஆ). ராஜா, தமது அழைப்பை ஒரு சிலர் புறக்கணித்து, தம்மை அவமானப் படுத்தியதால் விருந்தை இரத்துச் செய்யவில்லை. அவர் இன்னமும் தமது விருந்தை நடத்தினார், மற்றும் அவரது விருந்து அறையானது வைபவத்திற்கு வந்த விருந்தினர்களால் நிறைந்தது. அது போலவே, மக்கள் தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் தடைசெய்ய இயலாது.

### கருத்து

இந்த உவமையின் முதல் பகுதியிலிருந்து நாம் இன்னும் அதிகமான வற்றைக் கற்றுக்கொள்ள முடியும், ஆனால் நாம் விசேஷமாகப் பின்வரும் கருத்தைக் கற்றுக்கொள்வோமாக: அழைப்பானது எல்லாருக்கும் விடுக்கப்

*பட்டுள்ளது, ஆனால் ஒவ்வொருவரும் அதை ஏற்கவோ அல்லது புறக்கணிக்கவோ உரிமை கொண்டுள்ளனர். இருப்பினும், நாம் அழைப்பைப் புறக்கணித்தால், ராஜாவை நாம் மகிழ்ச்சியற்றவராக்குகின்றோம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.*

*வசனம் 14ஐக் கண்ணோக்குங்கள்: ''அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்." "அநேகர்" என்ற வார்த்தை ''எல்லாரையும்'' குறிப்பிடுகிறது;[18] சுவிசேஷத்தினால் எல்லாரும் அழைக்கப்படுகின்றனர் (2 தெச. 2:14). துரதிர்ஷ்டவசமாக, "ஒரு சிலரே தெரிந்து கொள்ளப்படுகின்றனர்." சந்தர்ப்பப் பொருளில், "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்'' என்பது திருமண விருந்தை மகிழ்வுடன் அனுபவிக்க அனுமதிக்கப்பட்டிருந்தவர்களைக் குறிக்கிறது. ஒவ்வொரு தனிநபரும் அனுமதிக்கப்பட்டாரா அல்லவா என்பது குறித்து ராஜா தன்னிச்சையாக ஏதேனும் முடிவெடுத்தாரா? இல்லை. அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தாம், ''தெரிந்துகொள்ளப்பட்டவர்களில்'' ஒருவராக இருப்பதா இல்லையா என்பதை, ராஜாவின் அழைப்பை ஏற்றுக் கொள்ளுதல் அல்லது புறக்கணித்தல் என்பதன் மூலம் அவரவர்களே முடிவு செய்தனர்.*

*நீங்கள் ஒரு கிறிஸ்தவராக வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். அவர் தமது குமாரனின் ''திருமண விருந்தில்'' கலந்து கொள்ளும்படி உங்களுக்குத் தனிப்பட்ட அழைப்பிதழைக் கொடுத்திருக்கின்றார். இயேசு, "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறினார் (மத். 11:28). மீண்டுமாக அவர், ''இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" என்று கூறினார் (வெளி. 3:20). பவுல், "இதோ, இப்பொழுதே 'அநுக்கிரகக் காலம்,' இப்பொழுதே 'இரட்சணிய நாள்' " என்று எழுதினார் (2 கொரி. 6:2ஆ). ''ஆவியும் மணவாட்டியும் 'வா' என்கிறார்கள்; கேட்கிறவனும் 'வா' என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; ...'' (வெளி. 22:17). இருப்பினும் முடிவில், நீங்கள் கர்த்தருடைய கிருபையுள்ள அழைப்பை ஏற்றுக் கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ வேண்டியிருக்கும்.*

## இது பொறுப்பை உள்ளடக்கிய ஒரு அழைப்பாக உள்ளது (வ. 11-14)

**உவமை**

*இன்னமும் நாம் இதைப் படித்து முடிக்கவில்லை. இந்த இரட்டை உவமையில் இன்னமும் ஒரு இரண்டாம் பாகம் உள்ளது. விருந்து மண்டபம் நிறைந்த பின்பு, ''விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தார்" (வ. 11அ). நேர்ப்பொருளில் அவர், "சாய்ந்திருந்தவர்களை"*

கண்ணோக்கினார். மக்கள் ஏற்கனவே விருந்து மேஜைகளில் சாய்ந்திருந்து, அபரிமிதமான உணவை மகிழ்வுடன் அனுபவிக்கத் தயாராக இருந்தனர்.

ராஜா, கூட்டத்தினூடே சென்று காண்கையில், "கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அவர் கண்டு" (வ. 11ஆ). அப்படிப்பட்ட ஒரு விழாவில், விருந்தினர் தகுதியான உடை[19] அணிந்திராதிருத்தல் என்பது விருந்தளிப்பவருக்கு ஒரு அவமானமாக இருந்தது.

> இரண்டாம் உலகப்போரின் முடிவில் ரஷ்ய நாட்டின் தலைவர், அங்கு வந்திருந்த பிரிட்டிஷ் நாட்டுப் பிரதம மந்திரியான வின்ஸ்ட்டன் சர்ச்சில் என்பவருக்கு விரிவான ஒரு விருந்தளித்தார். ரஷ்யர்கள் தங்களது மிகச் சிறந்த முறையான உடை அல்லது இராணுவ உடையை அணிந்து வந்திருந்தனர், ஆனால் அவர்களின் மரியாதைக்குரிய விருந்தினர் அவ்விதமாக உடையணிந்து வரவில்லை. சர்ச்சில், இலண்டன் நகரில் ஜெர்மனியின் வி-வெடிகுண்டுத் தாக்குதலின் போது அணிந்திருந்த தமது புகழ்பெற்ற zipper coveralls என்ற உடையை அணிந்தவராக வந்தார். அது ரஷ்யர்கள் மதிக்கக் கூடிய வீட்டு நினைவுத் துயரத்தின் தொடுதல் ஒன்றை அளிக்கும் என்று அவர் நினைத்தார். அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அவர்கள் மரியாதைக் குரிய தங்களது புகழ்மிக்க விருந்தினர் தங்களது விருந்து அவரது மிகச்சிறந்த உடைகளுக்குத் தகுதியானதென்று கருதவில்லை என்று நினைத்து, சிறுமைப்பட்டு அவமானப்பட்டார்கள்.[20]

இரண்டாவது விவரிப்பு ஒன்று சிந்தைக்கு வருகிறது: ஒரு தந்தை தமது மகளுக்கு விலையுயர்ந்த திருமண உடை வாங்கப் பணம் கொடுத்திருந்து, அவள் திருமணம் செய்துகொள்ள அழுக்கான ஒரு ஜீன்ஸ் உடையில் அல்லது பழைய கசங்கிய புடவையொன்றைக் கட்டிக்கொண்டு வந்தால் எப்படியிருக்கும்? தந்தை மனம் புண்படுவார் என்று நீங்கள் நினைக்கின்றீர் களா? நீங்கள் தகுதிவாய்ந்த பிற விவரிப்புக்களை நினைத்துப் பார்க்கலாம்.

இந்த உவமையில் வரும் இந்த மனிதர் திருமண உடையணிந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது ஏன்? என்பது பற்றி வாக்கு வாதங்கள் கிளர்ந்து எழுந்துள்ளன. மனிதர்கள், "ஆனால் இந்த ராஜா, தெருக்களில் இருந்தவர்களைத்தானே விருந்தினர்களாக அழைத்துக் கொண்டு வந்திருந்தார். அவர்கள் முறையான உடை அணிந்திருக்க வேண்டும் என்று அவர் ஏன் எதிர்பார்க்க வேண்டும்?" என்று மறுப்புத் தெரிவித்துள்ளனர். இதற்குப் பதில் அளிக்கும் வகையில், மத்திய கிழக்குக் கலாச்சாரங்கள் சிலவற்றில், விருந்து அளிப்பவரால், நீண்ட கைகளும் இடைக்கச்சையும் உள்ள நீண்ட உடையோ அல்லது ஒரு வெள்ளை உடையோ விருந்து மண்டபத்தின் கதவருகில் வைத்து ஒரு உதவியாளரைக் கொண்டு விருந்தினர்களுக்குத் தரப்படுதல் வழக்கம் என்பது குறிப்பிடப் பட்டுள்ளது.[21] இன்றைய நாட்களிலும்கூட, நான் வாழும் இடத்தில், ஒரு மணமகளின் குடும்பத்தார், திருமண விருந்தில் கலந்துகொள்பவர்களுக்கு (வைபவத்தின்போது மணமகளுடன் நிற்பவர்களுக்கு) சிறப்பான உடைகளை அளிக்கின்றனர். இதைப் போன்ற ஒரு விஷயம் அந்த நாட்களில் பலஸ்தீனத்தில் எழுதப்படாத சட்டமாக இருந்திருந்தால், இந்த

மனிதர் தமக்களிக்கப்பட்ட உடையை அணிந்து கொள்ளாததினால் தமக்கு விருந்தளித்தவரை அவமானப்படுத்தினார். அழைக்கப்பட்டவர்கள் வீடுகளுக்குச் சென்று சுத்திகரித்துக்கொண்டு வருவதற்கு ராஜா நேரம் கொடுத்திருந்தார் என்ற கருத்தை மற்றவர்கள் முன்வைக்கின்றனர். விஷயம் அதுவாக இருந்ததென்றால், இம்மனிதர் தமது மிகச்சிறந்த உடையை உடுத்திவந்திருக்கும்படி எதிர்பார்க்கப்பட்டிருப்பார்.

விவரங்களை அறிந்து கொள்ளுதல் என்பது நமக்கு முக்கியமானதாக இருப்பதில்லை. ஏதோ ஒரு வழியில், இம்மனிதர் திருமண விருந்திற்குத் தம்மைத் தயாரித்துக்கொள்ள *முடிந்திருந்தது*, ஆனால் அவர் அதைச் *செய்யாதிருந்தார்* என்பதே கருத்தாக உள்ளது. இந்தத் தனிநபர், போக்குச் சொல்லத் தமக்கு இடமில்லாது இருந்ததை *அறிந்தார்* என்பது அடுத்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறது.

இம்மனிதர் தக்க வகையில் உடையணிந்து வரவில்லை என்பதைப் பற்றி *ராஜா* தாமே முடிவு செய்தார் - அது போன்றே, நம்மைக் குறித்துத் தேவனே முடிவு செய்கின்றார். தகுதியான வகையில் "உடுத்தியிருத்தல்" என்று கூறும்போது நாம், புறம்பானவற்றை அல்ல ஆனால் உள்ளான வற்றையே பேசுகின்றோம்.[22] இப்படிப்பட்ட விஷயங்களைக் குறித்து முடிவு ஏற்படுத்த நான் தகுதியானவனாக இருப்பதில்லை. ஆவிக்குரிய வகையில் தகுதியான உடையணிந்திராதவர்களை நான், அவர்கள் அதை அணிந்துள்ளனர் என்று நினைக்கலாம், ஆவிக்குரிய வகையில் தகுதியான உடையணிந்திருப்பவர்களை நான், அவர்கள் அதை அணிந்திருப்பதில்லை என்று நினைக்கலாம் (1 சாமு. 16:7ஐக் காணவும்). தேவன் ஒருவர் மாத்திரமே நமது இருதயங்களை அறிந்துள்ளார் (அப். 15:8). நாம் ஒவ்வொருவரும் இதைப்பற்றி ஒரு *தனிப்பட்ட* நடைமுறைப் பயன் பாட்டை ஏற்படுத்த வேண்டியுள்ளது: "தேவன் *எனது* இருதயத்திற்குள் கண்ணோக்கும்போது, அவர் என்னத்தைக் காண்கின்றார்?"

இம்மனிதன் தகுதியான உடையை அணிந்திராததை ராஜா கண்ட போது, "சிநேகிதனே,[23] நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய்?" என்று ராஜா இவரிடம் கேட்டார் (மத். 22:12அ). ராஜா ஒரு விளக்கம் கேட்டார். இம்மனிதர் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் ஒன்றைக் கொண்டிருந்தால், இவர் மன்னிக்கப்பட்டிருப்பார் என்பது இவ்விடத்தில் மறைபொருளாக உள்ளது. இருப்பினும், "அவன் பேசாமலிருந்தான்" (வ. 12ஆ). ''பேசாமல்'' என்பது ''வாய் கட்டப்பட்டு'' அல்லது "வாயடைக்கப்பட்டு" என்று அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம்மனிதர் ஒரு சாக்குபோக்கைக் கூட அளிக்காதிருந்தார்.

பின்பு ராஜா தமது "பணிவிடைக்காரர்களிடம்" பேசினார் (வ. 13அ). இவர்கள் அழைப்பு விடுப்பதற்கு அனுப்பப்பட்டிருந்த வேலைக்காரர்கள் அல்ல, ஆனால் ராஜாவின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த பணிவிடைக்காரர்களாய் இருந்தனர்.[24] இவர்களை "சேவிக்கும் உதவிக் காரர்கள்"[25] என்று ரிச்சர்டு ட்ரென்ச் அவர்கள் அழைத்தார். இவர்கள், "அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்

*செய்கிறவர்களையும் சேர்த்து" எடுக்கின்ற கர்த்தருடைய தூதர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் (மத். 13:41; மத். 13:49; லூக். 19:24ஐக் காணவும்).*

*பணிவிடைக்காரரிடத்தில் ராஜா, "இவனை[மறுபடியும் விருந்தில் பிரவேசிக்க வகையெதுவும் இல்லாதபடிக்கு[26]]க் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்" என்று கூறினார் (மத். 22:13ஆ). இந்த உவமையின் கற்பனையுருவைத் தக்க வைத்துக் கொள்வதற்கு, நாம் பின்வரும் சொல்லமைவைப் பயன்படுத்த முடியும்: "இவனை, விருந்தின் வெளிச்சமும் கோலாகலமும் உள்ள இடத்திற்குப் புறம்பே இருளின் அந்தகாரத்தில் தள்ளுங்கள், இவன், தான் தவறவிட்ட அற்புதமான வாய்ப்பைக் குறித்துப் பற்களைக் கடித்துக்கொண்டு அங்கே கிடக்கட்டும்." உங்களில் பெரும் பாலானவர்கள் இதே சொல்லாக்கமானது நரக அக்கினியில் தண்டனைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிவீர்கள் (மத். 8:12; 25:30).*

**கருத்து**

*கர்த்தருடைய அழைப்பைத்[27] தொடக்கத்தில் ஏற்றுக்கொள்ளுதல் என்பது போதுமானதாக இருப்பதில்லை என்பதே, உவமைக்குள்ளாக இருக்கின்ற இந்த உவமையிலிருந்து நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக உள்ளது. கர்த்தருடைய விருந்தை நாம் மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு, நமக்கு விருந்தளிப்பவருக்கு நாம் தொடர்ந்து தகுதியான மதிப்பைக் காண்பிக்க வேண்டும்.[28]*

*குறிப்பாக, நாம் ஆவிக்குரிய வகையில் உடையணிவிக்கப்பட்டிருக்க வேண்டும். எபேசியர் 4:22-24ல் பவுல் பயன்படுத்தியுள்ள "பழைய மனு ஷனை நீங்கள் களைந்துபோட்டு, ... புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (கொலோ. 3:10, 12, 14ஐயும் காணவும்) என்பது போன்ற சொல்விளக்கங்களில், தகுதியாய் உள்ளான உடைகளை அணிந்திருத்தலின் உருவகம் காணப்படுகிறது. கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இந்த அப்போஸ்தலர், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று எழுதினார் (கலா. 3:26, 27; ரோமர் 13:14ஐயும் காணவும்). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில், தேவனுடைய ஜெயம்கொண்ட மக்கள் "வெள்ளை அங்கிகளை" அணிந்துள்ளனர், "அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளி. 7:9, 14; வெளி. 3:4, 5, 18; 6:11; 22:14ஐயும் காணவும்). நாம் கிறிஸ்தவர்களாகி "வெள்ளை அங்கியை" உடுத்திய பின்பு, அவற்றை நாம் - உண்மை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதினாலும் (வெளி. 2:10) நாம் பாவம் செய்கின்றபோது கர்த்தரிடத்தில் மீண்டும் திரும்புவதினாலும் (1 யோவா. 1:7, 9) - சுத்தமாக காத்துக்கொள்ள வேண்டும் (யாக். 1:27).*

*நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம் என்று முன்னதாகவே*

நாம் ஆழ்ந்து சிந்தித்திருந்தோம், ஆனால் இது "மலிவான கிருபை"[29]யாக இருப்பதில்லை. பவுலின் நாட்களில் சிலர், கிருபையினாலே இரட்சிப்பு என்ற உபதேசமானது ஒருவர் தாம் விரும்புகின்ற வழியில் வாழ்வதற்கு அனுமதித்தது என்று போதித்துக் கொண்டிருந்தனர். இதற்கு அப்போஸ்தலர் பின்வருமாறு பதில் அளித்தார்:

> ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:1-4).

ஏற்கனவே குறிப்பிட்டபடி, இயேசு பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு இதை முடித்தார்: "அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்" (மத். 22:14). எகிப்திலிருந்து பலர் அழைக்கப்பட்டனர், ஆனால் ஒரு சிலர் மாத்திரமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்கத் தேர்ந்துக் கொள்ளப்பட்டனர் என்று யூதர்கள் ஒரு பழமொழியைக் கொண்டிருந்தனர். அழைக்கப்பட்டவர்கள் எல்லாரிலும், ஒரு சிலர் மாத்திரமே விருந்து மண்டபத்தில் இருக்கவும், அளிக்கப்பட்ட விருந்தை மகிழ்வுடன் அனுபவிக்கவும் அங்கிருக்கும்படி உண்மையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பதே இந்த உவமையில் உள்ள கருத்தாக இருக்கிறது.

## முடிவுரை

அழைப்பிற்கான நன்கறியப்பட்ட ஒரு பாடலானது பின்வருமாறு கூறுகிறது:

> "எல்லாம் தயாராயிற்று," விருந்துக்கு வாருங்கள்!
> வாருங்கள் விருந்து பரிமாறப்பட்டுள்ளது,
> இளைத்தவர்களே, களைத்தவர்களே, வாருங்கள்,
> உங்களுக்கு வளமான உணவு அளிக்கப்படும்.[30]

நீங்கள் தேவனுடைய ஆவிக்குரிய விருந்தை மகிழ்வுடன் அனுபவிக்கும்படிக்கு இயேசு மரிக்க வேண்டியிருந்தது. ராஜாவின் அழைப்பை இலேசாக எடுத்துக்கொள்வதன்மூலம் அவரை அவமானப்படுத்தாதீர்கள். உங்கள் ஆத்துமா இடர்ப்பாட்டில் உள்ளது. இன்றே கூட, "ஆம்" என்று சொல்லுங்கள்.



குறிப்புகள்

[1]உலகில் நான் வாழும் பகுதியில், வர்த்தகர்கள் அவ்வப்போது, "ஒன்றுக்குரிய விலையில் இரண்டு பொருட்கள்" என்று விற்பதுண்டு. இந்த உவமையில் நீங்கள் ''ஒன்றின் விலைக்கு'' இரண்டு உவமைகளைப் பெறுகின்றீர்கள். [2]KJVயில் ''திருமணம்'' என்றுள்ளது, ஆனால் வேத வசனப்பகுதியானது ஒரு திருமண விருந்தைப் பற்றிப்பேசுகிறது. NIVயில் "திருமண விருந்து" என்றுள்ளது. [3]KJVயில் "ஊழியர்கள்" என்றுள்ளது, ஆனால் கிரேக்கமொழி வேதாகமத்தில் "அடிமைகள்" என்பதற்கான வார்த்தை உள்ளது. [4]திருமண அடையாளத்துவத்தைக் குறித்து, ஏசாயா 61:10; 62:5; ஓசியா 2:19 ஆகிய வசனங்களைக் காணவும். விருந்தின் அடையாளத்துவத்தைக் குறித்து, ஏசாயா 25:6; 65:13 ஆகிய வசனங்களைக் காணவும். (லூக். 14:15ஐயும் காணவும்.) [5]திருமண அடையாளத்துவத்தைக் குறித்து, மத்தேயு 9:15; யோவான் 3:29 ஆகிய வசனங்களைக் காணவும். விருந்தின் அடையாளத்துவத்தைக் குறித்து, மத்தேயு 8:11, 12; லூக். 22:30 ஆகிய வசனங்களைக் காணவும். [6]யூதர்களின் திருமணத்தில் இரண்டு படிநிலைகள் இருந்தன: திருமண நிச்சயதார்த்தம் மற்றும் உண்மையான திருமண வைபவம். புதிய ஏற்பாடு, கிறிஸ்துவுடன் சபைக்குள்ள உறவைக் குறித்துப் பேசுகையில் இவ்விரு நிகழ்ச்சிகளும் ஒன்றுகலக்கப்படுகின்றன. 2 கொரிந்தியர் 11:2ம் வசனம் திருமண நிச்சயதார்த்தம் பற்றிப் பேசுகையில், எபேசியர் 5ம் அத்தியாயமானது ஒரு மணப்பெண்ணின் உருவகத்தைப் பயன்படுத்துகிறது. இப்படிப்பட்ட விவரங்கள் இந்தப் பிரசங்கத் திற்கு இன்றியமையாதவைகளாக இருப்பதில்லை. [7]ஒரு எழுத்தாளர் இதைப் பின்வருமாறு எழுதினார்: "விருந்து ஏற்கனவே தொடங்கியிருந்தது!" [8]எந்த ஒரு உவமையும் கிறிஸ்தவ வாழ்வை ஒரு சவ அடக்க ஊர்வலத்துடன் ஒப்பிட்டதில்லை என்று ஒருவர் சுட்டிக்காண்பித்தார். [9]போலியான இந்தக் கடிதம் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டது, இது பிலாத்துவின் காலத்தவரான புபிலியு லென்ட்டுலஸ் என்பவரால் எழுதப்பட்ட தென்று யூகிக்கப்படுகிறது. இந்தத் தகவல், Neil R. Lightfoot, *The Parables of Jesus,* Part 2 (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 12 என்ற புத்தகத்தில் இருந்து வருகிறது.

[10]ஒருக்காலும் சிரிக்காதவரைச் சுற்றியிருக்க எவரொருவரும் விரும்ப மாட்டார் கள், ஆனால் மக்கள் இயேசுவுடன் இருப்பதை மகிழ்வுடன் அனுபவித்தனர். இயேசுவின் உபதேசங்கள் பலவற்றில் அவரது நகைச்சுவை உணர்வு பிரதிபலிக்கிறது. [11]Lightfoot, 12. அடுத்த பத்தியில் உள்ள தகவலும் இதே ஆதாரமூலத்தில் இருந்தே வருகிறது. [12]இந்த இரட்டை அழைப்பை எஸ்தரின் புத்தகத்தில் இருந்து விவரிக்க முடியும்: எஸ்தர், ஆமானை ஒரு விருந்திற்கு அழைத்தாள் (எஸ். 5:8). பின்பு, [விருந்திற்கு] உண்மையான நேரம் வந்தபோது, அவரை அழைத்து வர அவள் பிரதானிகளை அனுப்பினாள் (எஸ். 6:14). [13]இந்தப் பிரசங்கத்திற்கு முந்திய பாடத்தில், அழைக்கப்பட்டவர்கள் என்பது சந்தர்ப்பப் பொருளில் "மதம் சார்ந்த" யூதர்களைப் பொதுவாகவும், யூதத்தலைவர்களைக் குறிப்பாகவும் பிரதிநிதித்துவப் படுத்தியது என்று குறிப்பிடப்பட்டது. சட்டப்படி, நண்பர்களும் முக்கியஸ்தர்களும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்பட்டனர். யூதர்கள் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாக இருந்தனர், அவர்கள் அவருக்கு முக்கியமானவர்களாக இருந்தனர், அவர்கள் அவரது நண்பர்கள் என்று யூகிக்கப்பட்டனர். [14]William Barclay, *The Gospel of Matthew,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 268. [15]ஒரு நவீன கால விவரிப்பை ஆழ்ந்து சிந்தியுங்கள்: தீவிரவாதிகள் அமெரிக்கத் தூதரகத்திற்குக் குண்டு வைத்துத் தகர்க்கும்போது, அவர்களின் நடவடிக்கைகள் அந்த விபத்தில் கொல்லப்பட்ட அல்லது காயப்பட்ட மக்களுக்கு எதிராக மட்டுமின்றி, அமெரிக்க அரசிற்கும் எதிராகவே இருக்கின்றன. [16]என்னிடம் உள்ள வேதாகமத்தின்

இடைவரிப்பதிப்பின்படி, நேரடியான கிரேக்க வார்த்தை "வழிப் பிரிவுகளில்" என்று அர்த்தப்படுகிறது. சில பகுதிகளில் ''குறுக்குச் சாலைகள்'' என்பது கருத்தை உணர்த்துவதாயிருக்கும். [17]முந்திய பாடத்தில், "நல்லோர் பொல்லார்" என்ற சொற்றொடர் சந்தர்ப்பப் பொருளில் யூதர்களின் ''தேவபக்தி'' இல்லாத பிரிவினரையும் மற்றும் ஒருவேளை புறஜாதியாரையும்கூடப் பிரதிநிதித்துவப்படுத்தியது என்றே குறிப்பிடப்பட்டது. [18]''அநேகர்'' என்பது சிலவேளைகளில் ''எல்லாரும்'' என்ற கருத்தில் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ''அநேகரை மீட்கும் பொருளாக'' (மத். 20:28) என்பதையும் "எல்லாரையும் மீட்கும் பொருளாக" (1 தீமோ. 2:6) என்பதையும் ஒப்பிட்டுக் காணவும். [19]இந்த உடை மிகச் சரியாக எதுவாயிருந்தது என்பது பற்றிக் கல்வியாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர், ஆனால் குறைந்தபட்சமாக இது விருந்தினரின் மிகச் சிறந்த உடையாக இருந்திருக்க வேண்டும்.

[20]Eldred Echols, *Discovering the Pearl of Great Price* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1992), 167. [21]Ibid., 171. இது ஏழைகள் சங்கடப்படுவதைத் தவிர்ப்பதற்காக இருந்திருக்கும் என்பது என் புரிந்துகொள்ளுதலின்படியானதாக உள்ளது. சமூகநிலை அல்லது நிதிநிலை ஆகியவற்றில் எந்தத் தரத்தில் இருந்தாலும், எல்லாரும் ஒரே மாதிரியாக உடுத்தியிருந்தனர். [22]ஆவிக்குரிய வகையில் தக்கவாறு "உடுத்தியிருத்தல்" என்பதின் அவசியத்தை விவரிப்பதற்கு, வேதாகமம் அடிக்கடி உடையின் உருவகத்தைப் பயன்படுத்துகிறது. யோபு 29:14; ஏசா. 61:10; எசே. 16:10 ஆகியவை பழைய ஏற்பாட்டு உதாரணங்களில் உள்ளடங்குகின்றன. இந்த எடுத்துரைப்பின் பிற்பகுதியில் புதிய ஏற்பாட்டிலிருந்து பல உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுடன் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் "தரித்துக்கொள்ளுதல்" பற்றிய வேத வசனப்பகுதிகளும் கூட்டிக் கொள்ளப்பட முடியும் (ரோமர் 13:12; எபே. 6:11-17; 1 தெச. 5:8). [23]"அன்பு" என்ற வார்த்தையின் ஒரு வடிவமானது சுவிசேஷ விவரங்களில் ''சிநேகிதன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் இவ்விடத்தில் அந்த வார்த்தை பயன்படுத்தவில்லை. இந்த வார்த்தையை "தோழர்" அல்லது "கூட்டாளி" என்று மொழிபெயர்க்க முடியும். இந்தச் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் மத்தேயு ஒருவரால் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இது எப்போதுமே இவ்வார்த்தையின் மறைமுகக் கருத்திற்கு எதிரானதையே குறிக்கிறது (மத். 20:13; 26:50). [24]*Doulos* என்பது "அடிமை" என்பதற்கான கிரேக்க வார்த்தையாக உள்ளது. இவ்விடத்தில் *diakonos* என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. [25]Richard C. Trench, *Notes on the Parables of Our Lord* (Westwood, N. J.: Fleming H. Revell Co., 1953), 243. [26]லூக்கா 16:26ஐக் காணவும். [27]நாம் இதை விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் செய்கின்றோம். [28]நாம் இதை உண்மை நிறைந்த கிறிஸ்தவ வாழ்க்கையினால் செய்கின்றோம். [29]"மலிவான கிருபை" என்ற சொற்றொடரானது வழக்கமாக, ஜெர்மானிய இறையியலாளரான டயடரிச் பான்ஹோஃபர் (1906-45) என்பவருடன் இணைவு பெற்றுள்ளது.

[30]Charlotte G. Homer, "Come to the Feast," *Songs of the Church,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). உங்கள் உரையைக் கேட்பவர்கள் இந்தப் பாடலை அறிந்திருந்தால், இந்தப் பிரசங்கத்தின் முடிவில் நீங்கள் இதைப் பாட விரும்பலாம்.